# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்: 314/மா/2023
நாள்: 03.1.2024

திரு. R. மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் –2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 24.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2023 அன்று பெறப்பட்டு, 314/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 24.08.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி வார்டு எண்.26 மண்டலம் 02 (வடக்கு) கதவு எண். 7A மருதுபாண்டியர் நகர் 4வது மெயின் ரோடு நரிமேடு, மதுரை –2ல் இயங்கி வரும் சரவணா மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனை கட்டிடம் ஆகும். இம்மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. சரவணா மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்டதாகும். இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் சரவணா மருத்துவமனை கட்டிடத்திற்கு வாகனம் நிறுத்துவதற்கு (parking space) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் வாகனங்களை மருத்துவமனை முன் ரோட்டில் நிறுத்துவதால் இவ்வழியாக செல்லும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் பொதுமக்கள் யாவரும் நடந்து செல்லும்போது மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

மேலும் கல்லூரி வாகனம், பள்ளி வாகனங்கள், குடிநீர் வாகனம், ஆம்புலன்ஸ் மற்றும் சரக்கு வாகனங்கள், ஆட்டோக்கள் இவ்வழியே செல்லும்போது வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையை கண்டும் காணாமலும் கண்காணிக்கத்தவறியதும் மெத்தனமாக செயல்பட்டுவரும் மதுரை மாநகராட்சி சம்மந்தப்பட்ட முன்னாள், இந்நாள் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சரவணா மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டுக் கட்டிடம் என்பதால் 1973-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறவில்லை. மேற்படி மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொதுகட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெற்று அவ்வப்போது உரிமம் புதுப்பிப்பது கட்டாயம் ஆகும். ஆனால் உரிமம் ஏதும் பெறவில்லை. எனவே சட்டத்திற்கு புறம்பாக வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமலும், நான்கு புறமும் அரசு விதிகளின்படி இடம் விடாமலும் (set back) உரிய அரசு விதிகளின்படி வரைபடத்திற்கும் மற்றும் அனுமதிக்கும் மாறாக கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டு வரும் சரவணா மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடும் Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது**

**3) மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் உதவி ஆணையர் (பொ) தனது 18.11.2023 மற்றும் 16.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" சரவணா மருத்துவமனை கட்டிடம் 4000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டடமாக உள்ளதால், மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குவது மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்தைச் சார்ந்ததாகும் என்றும் மேலும், சரவணா மருத்துவமனைக்கான கட்டிட வரைபட அனுமதி குறித்து மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி உரிய விவரம் கோரி, மனுதாரரின் புகார் உண்மைத்தன்மை அறிந்து மேல்நடவடிக்கை தொடரலாம் என உதவிப் பொறியாளர் தெரிவித்துள்ளார் என்றும் சரவணா மருத்துவமனை கட்டிட வரைபட அனுமதி நகல் வழங்கக்கோரி உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திற்கு கடந்த 09.11.2023 அன்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் இதுநாள் வரை மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும் எனவே கட்டிட வரைபட அனுமதி நகல் மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்றவுடன் மனுதாரரின் புகார் குறித்து அலுவலக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தென்காசி மாவட்டம் குற்றாலம் விருந்தினர் மாளிகையில் 04.12.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

**5) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

"மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு) வார்டு எண்.26, மருதுபாண்டியர் நகர் 4வது மெயின் ரோட்டில் இயங்கி வரும் சரவணா மருத்துவமனை மூன்று மாடிகளை கொண்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டிடத்திற்கு நான்குபுறமும் அரசு விதிகளின்படி (set back space) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மருத்துவமனைக் கட்டடத்திற்கு வாகனம் நிறுத்துவதற்கு இடம் (parking space) விடாமல் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வருபவர்கள் தங்களது வாகனங்களை சாலையில் நிறுத்திச் செல்வதால் அவ்வழியாக செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்கண்ட சரவணா மருத்துவமனை கட்டடம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கட்டிடம் என்பதால் 1973-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33ன்படி அக்கட்டிடத்திற்கு ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறவில்லை.

எனவே, கட்டடத்தின் நான்குபுறத்திலும் தேவையான இடம் (set back space) விடாமல் கட்டப்பட்டும், வாகன நிறுத்தும் இடம் இல்லாமலும் இயங்கி வரும் மேற்கண்ட மருத்துவமனைக்கு stop work notice/notice for approved plan தாக்கீதும், நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன்படி நடவடிக்கை மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (நிலை) எண்.7 நாள்:10.01.2023ன்படி நடவடிக்கை எடுத்திடவும், அக்கட்டடத்திற்கு Lock and seal demolition அறிவிப்பும் மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6). மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் இளநிலைப்பொறியாளர் 18.12.2023 அன்றைய நேரடி விசாணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ புகார் எண்.314/மா/2023 வழக்கு தொடர்பாக 18.12.2023 இன்று குற்றாலம் விருந்தினர் மாளிகையில் சரவணா மருத்துவமனை 7A மருதுபாண்டியர் தெரு நரிமேடு சம்மந்தமாக ஆணையர் முன்னிலையில் நேரில் ஆஜராகி விளக்கமளித்தேன் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உதவி ஆணையரின் 16.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி, மண்டலம்-2, (வடக்கு) வார்டு எண்.26, கதவு எண்.7A மருதுமாண்டியர் நகர், 4வது மெயின் ரோட்டில் இயங்கிவரும் சரவணா மருத்துவமனை கட்டிடம் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாகவும், நான்குபுறமும் இடைவெளி (set back) விடாமலும், வாகன

நிறுத்துவதற்கு இடம் விடாமலும், இயங்கி வருவதாகவும், எனவே அக்கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட சரவணா மருத்துவமனை கட்டிடம் குறித்து மனுதாரர் எவ்வித ஆதாரமும் இணைக்காமல் புகார் அளித்துள்ளதாகவும், நகரமைப்பு சட்டம் 1971 நடைமுறைக்கு வந்த பின்பு காலாவதியான தமிழ்நாடு பொதுக்கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ஐ குறிப்பிட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுதாரர் கோரியுள்ளதாகவும், அம்மருத்துவமனை 4000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டிடமாக உள்ளதால், அக்கட்டிடத்திற்கு கட்டிட வரைபட அனுமதி அளிப்பது மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்தை சார்ந்தது என்பதால் மேற்கண்ட மருத்துவமனை மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகத்திலிருந்து மேற்படி மருத்துவமனைக்கான கட்டிட வரைபட அனுமதி நகல் கோரப்பட்டுள்ளது என்றும் வரைபட நகல் கிடைக்கப்பெற்றவுடன் மனுதாரரின் புகார் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையிலும், இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்கு மூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் எவ்வித அடிப்படை ஆதாரமும் அளிக்காமல், சரவணா மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்று புகார் மனு அளித்து இருந்தாலும், மனுதாரர் மதுரை மாநகராட்சிக்கு மேற்கண்ட பொருள் தொடர்பாக 17.8.2023 அன்று புகார் மனு அளித்தபின்பு தான் மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் 09.11.2023 நாளிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு பதில் அளித்துவிட்டு உள்ளூர் திட்டக்குழுமத்திடமிருந்து வரைபட நகல் பெற எவ்வித தொடர் நடவடிக்கையும் (follow up action) எடுக்காமல் அதன் பின்பு இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்ட பின்பும் உள்ளூர் திட்டக் குழுமத்திடமிருந்து மேற்கண்ட மருத்துவமனையின் வரைபட நகல் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையரின் அறிக்கையில் தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்லது மட்டுமல்லாமல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும் மனுதாரரும் தன்னுடைய மனுவிற்கு ஆதாரம் இல்லாமல் புகார் அளிப்பதும் வாடிக்கையாக கொண்டுள்ளார். இது குறித்து இம்முறைமன்றம் மனுதாரருக்கு ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே அறிவுரை வழங்கியுள்ளது. எனவே மனுதாரரின் இச்செயலும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

2014 ஆண்டை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவுகளில் குறிப்பாக

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

**பிரிவு:12**(1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம்-2 (வடக்கு) வார்டு எண்.26, கதவு எண்.7A மருது பாண்டியர் நகர், 4வது மெயின் ரோட்டில் இயங்கி வரும் சரவணா மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்பது குறித்து 17.8.2023 அன்று புகார் மனு அளித்தவுடன், உள்ளூர் திட்டக்குழும அலுவலகத்திற்கு 9.11.2023 அன்று வரைபட அனுமதி நகல் கோரி கடிதம் அளித்துவிட்டு, தொடர் நடவடிக்கை (follow up action) எடுக்காமலும், இம்முறைமன்றம் மேற்கண்ட மனு தொடர்பாக விசாரணைக்கு உத்திரவிட்ட நிலையில் அவ்வுத்திரவிற்கு எவ்வித மதிப்பும் அளிக்காத வகையில், வரைபட அனுமதி நகல் பெற எவ்வித முயற்சியும் எடுக்காமல் காலம் தாழ்த்தும் விதமாகவும், மெத்தனமாகவும் மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலர்கள் செயல்பட்டதாக இம்முறைமன்றம் கருதுவதால், மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தவாறு உள்ளூர் திட்டக்குழுமத்திடம் வரைபட நகலை விரைவாகப்பெற்று, மேற்கண்ட மருத்துவமனை வரைபடத்தின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம்–2ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இம்முறைமன்றம் ஆணையிட்டவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுகிறது.

The filed level officials responsible in the Madurai North Zone 02 are squarely to be blamed for wanton dereliction of duties, collusion, connivance and deep lethargy in this case. Instead of taking action based on the Town and Country Planning Act 1971 and the G.O. No. 7, Hg & UD Department, dated 10.01.2023, the act of asking for the Plan Copy from the violators themselves exposes their complicity, evasion and sheer disobedience to rules and regulations governing the Building Act. The Corporation Commissioner, Madurai is directed to launch disciplinary proceedings against all the delinquent, right from the Assistant Commissioner whose leadership failure and inefficiency has led to this chaotic situation and sorry state of affairs in the zone. The DMA is directed to pull up the Madurai Corporation with appropriate instructions to improve the administrative ethics of the zonal officials in the area

of Building Rules' enforcement. The Forum expresses its deep shock and condemnation over such inaction, maladministration and wilful dereliction on the part of the field officials.

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி,
த/பெ. திரு. இராமலிங்கம்,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை– 625 018.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை 625 002.

3) உதவி ஆணையர், (ஆணையர் வழியாக)
மண்டலம் – 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி, மதுரை - 625 002.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்-
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

10/10